**கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புச் செயற்திட்டம் - 2012**

---

**1. அபிப்பிராயம்**

---

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி அளவீடுகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2. நிதிசார் கூற்றுக்கள்**

**2.1 நிதிசார் செயலாற்றல்**

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 1,363,018,129 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 3,499,614,069 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம் மற்றும் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 958,459,116 | 952,669,759 | 2,281,674,397 |
| செயற்பாட்டுக் கிரயம் | *(108,146,283) | 213,738,637 | 307,768,092 |
| ஆலோசனை சேவைகள் | 79,588,888 | 51,689,398 | 273,531,279 |
| பெறுமதி சேர் வரி (வற்) | 99,660,178 | 93,584,666 | 303,184,071 |
| கடன் வட்டி | 104,529,203 | - | 104,529,203 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 228,927,027 | - | 228,927,027 |
| | 1,363,018,129 | 1,311,682,460 | 3,499,614,069 |

* மீளாய்வாண்டின் போதான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அவற்றிற்கு மாற்றப்பட்டு உள்ளடக்கப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதியால் எதிர்மறை மீதியாக இந்த தொகை காட்டுகின்றது.

**3. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் கடன் மற்றும் மானியங்களின் மீதி தவறான நாணய மாற்று வீதங்களை பயன்படுத்தியதின்

விளைவால் முறையே ரூபா 2,337,416 மற்றும் ரூபா 3,665,958 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

## 3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பொதுத் திறைசேரியின் 2012 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 02/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் முரணானது ஒப்பந்த தொகையின் 10 சதவீதத்தை விஞ்சியிருக்குமாளின் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட வேண்டுகைக்கு முரணாக சிவில் வேலைகளின் முரணாக ரூபா 11,823,535 செலுத்தப்பட்டிருந்தது.

## 4. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 4.1 நிதிகளின் பயன்பாடு

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒதுக்கப்பட்ட நிதிகள் மற்றும் அவற்றின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | கடன் உடன்படிக்கையின்படி நிதியளிப்பதற்காக உடன்பட்டதொகை | | 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | 2012 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2012 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஜ.யென் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ஜ.யென் (மில்) | ரூபா (மில்) | % |
| ஜேஐசீஏ | 3,975 | 3,549 | 841 | 860 | 1,956 | 2,743 | 77 |
| இலங்கை அரசாங்கம் | 1,384 | 1,236 | 150 | 149 | 518 | 795 | 64 |
| மொத்தம் | 5,359 | 4,785 | 991 | 1,009* | 2,474 | 3,538* | 74 |

* தேறிய தொழிற்படு மூலதனம் மற்றும் செலுத்த வேண்டிய கடன் வட்டி காரணமாக இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகைகளிலிருந்து இத்தொகைகள் உடன்பட்டிருக்கவில்லை.

### 4.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒதுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி செயற்திட்டத்தின் நோக்கங்கள் அடைதலை உறுதிப்படுத்துவதற்கு முழுச் செயற்திட்டக் காலத்தையும் மேவி மாதாந்த, காலாண்டு மற்றும் அரையாண்டு முதலியவற்றில் நிர்ணயிக்கின்ற பொறுப்புக்களுடன் நிதி மற்றும் பௌதீக இலக்ககள் சுட்டிக்காட்டுகின்ற ஒட்டுமொத்த விரிவான செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். பௌதீக இலக்குகளை மேவி செயற்திட்டத்தால் விரிவான செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் விலகல்களை இனங்காணல் மற்றும் தேவைப்பட்ட உடனடி அளவீடுகளைப் பெறல் என்பவற்றிற்காக அறிமுகப்படுத்தப்பட்ட பொறிமுறையெதுவும் இருக்கவில்லை. ஆகவே, மேற்குறிப்பிட்ட திட்டம் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தின் போது முறையான நில அளவை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இதன்விளைவால், எலியா கவுஸ் நீர்தேக்கத்தின் நிர்மாண வேலைத்தளத்தில் பாறை வெடிக்கவைப்பதற்காக செயற்திட்டத்தால் ரூபா 4,300,246 ஆன மேலதிக செலவினம் செலவழிக்கப்பட்டிருந்தது. மேலும், வெடிக்கப்பட்ட பாறைப் பொருட்கள் வெளியாருக்கு செயற்திட்டத்தால் விற்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றில் செயற்திட்டதால் உருவாக்கப்பட்ட வருமானம் நிதிக்கூற்றுக்களில் புறம்பாக காட்டப்பட்டிருக்கவில்லை.

### 4.3 குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டமானது கொழும்பு பெரும்பாக விநியோக வலையமைப்பிற்கு சேவை மட்ட முன்னேற்றங்களிற்காக தேவைப்பட்ட உபகரணங்களிற்காக செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 66,324,497 கிரயத்தில் 16 வாகனங்களை கொள்வனவு செய்திருந்தது. எவ்வாறாயினும், அந்த வாகனங்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் நோக்கங்களிற்காக வாகனங்களின் வாடகைக்காக ரூபா 850,019 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) செயற்திட்டமானது 2012 இல் ரூபா 1,236,953 கிரயத்தில் 8 கணனிகள் கொள்வனவு செய்திருந்ததுடன் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டது.

## 5. பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின்படி, மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 73.65 சதவீதம் மற்றும் 72.66 சதவீதமாக இருந்தது.

(ஆ) மாலிகாகந்த புதிய அலுவலக நிர்மாணம், முல்லேரியா கொட்டிகாவத்தை பகுதியில் விநியோக வரிசை மற்றும் குறைந்த வருமான தீர்ப்பனவு நீர் வழங்கல் முன்னேற்ற நடவடிக்கைகள் மீதான நடவடிக்கை போன்றன 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 மார்ச் 15 இல் பூர்த்தியாக்க வேண்டுமெனப் பட்டியலிடப்பட்ட எலிய கவுஸ் நீர்த்தேக்க நிர்மாணம், மாலிகாகந்த புதிய நீர்த்தேக்க நிர்மாணம், கொததுவ பிரதான பரிமாற்றம் மற்றும் புதிய தண்ணீர் கோபுரம் என்பன 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 55 சதவீதமான மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது.